**ரஜ்கம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 03 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 11 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ரஜ்கம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டட விடயங்கள் 31 இன் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகைக்காக ரூபா 14,093,213 ற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | ஹிக்கடுவ நகர சபைக்குரிய ரூபா 5,760,007 தொகைக்கான தகனசாலை ரஜ்கம பிரதேச சபை நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் என காட்டப்பட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1,437,034 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மைகளை சரி செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி மின்சார இருப்பு ரூபா 148,599 தொகை மற்றும் அத்திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு ரூபா 197,546 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 48,947 ற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இணக்கஞ் செய்யப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன செலவினத்திற்காக அரசிறை உதவு தொகை கணக்கின் மீதியிடையே ரூபா 3,401,225 ற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | வித்தியாசத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பெறுமதி மதிப்பீடு ஒன்றின் மூலம் சரி செய்வேன். |

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2008 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 288,833 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| 08 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி | பெறவேண்டிய மீதிகள் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| முன்கொண்டுவரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 10,670,683 தொகைக்கான 07 பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்க்கப்பட வேண்டும். | எடுப்பேன். |

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| 13 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 1,175,200 தொகைக்கான 04 செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 11,677,789 தொகைக்கான 04 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பேரேடுகள் மற்றும் பதிவேடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணித்துள்ள நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எழுத்தாணை வழங்கப்பட்டு நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 59 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |
| (iv) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களை ஆண்டுக்கொரு முறை பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>------------------------------- | | | |
| (i) நிதிப் பிரமாணம் 102 முதல் 110 வரை | நீர் பவுசர் விபத்துக்குள்ளாகியது தொடர்பாக நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன், நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 666,846 தொகைக்கான 09 வகையான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) நிதிப் பிரமாணம் 1645 மற்றும் 1646 | 14 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | ஓட்ட நிலையில் காணப்பட்ட 14 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,993,042 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,134,492 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,037,500 | 1,191,291 | 1,298,674 | 6,422,719 | 1,831,000 | 1,161,836 | 884,608 | 6,526,942 |
| வாடகை | 3,615,600 | 105,600 | 99,770 | 663,984 | 1,602,600 | 105,600 | 116,620 | 658,034 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,770,500 | 703,762 | 703,762 | 81,622 | 910,500 | 632,354 | 632,354 | 81,622 |
| | 10,423,600 | 2,000,653 | 2,102,206 | 7,168,325 | 4,344,100 | 1,899,790 | 1,633,582 | 7,266,598 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 14 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 8,850,610 ற்கான நிலுவை வீதவரி மீதியொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலக அதிகாரப் பிரதேசத்தை சேர்த்த வீதவரி நிலுவை ரூபா 3,252,113 தொகையாகும். அவற்றில் ரூபா 2,593,849 ற்கான நிலுவை ஒன்று காணப்பட்ட வீதவரி அலகுகள் 1824 இல் இருந்து எதுவித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2011 ஆண்டின் பின்னர் வீதவரி புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய காலத்தில் பெறுமான மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டு முதல் விண்ணப்பித்த போதிலும் பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,999,290 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 113,193,266 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேதனப் பசளை செயற்திட்டம் 05 வருடங்களுக்கு முன்னர் இருந்து நிறுத்தப்பட்டிருந்தமையால், அச் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட குப்பைகளை துண்டுகளாக்கும் இயந்திரம், குப்பைகளை கலவை செய்யும் இயந்திரம் மற்றும் கட்டடங்கள் என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் உக்கக்கூடிய குப்பைகள் 2 தொன் அளவு மொன்ரோசியாவத்தை குப்பை செயற்களத்திற்கு ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மொன்ரோசியாவத்த குப்பை செயற்திட்டத்தை செயற்படுத்தி குப்பை முகாமைத்துவத்திற்காக நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வேறு அரச நிறுவனம் ஒன்றுடன் இணைந்து செயற்பட்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக நீண்ட காலத்திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

(ஈ) **செயற்திட்டத்தை செயற்படுத்தாமல் கைவிடல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 600,000 தொகைக்கான போபகொட மஹகெதரவத்தை பாதை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்திட்டம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பேன் என அறிவிக்கின்றேன். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வீதி விளக்கு பராமரிப்புக்காக ரூபா 3,229,491 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் வீதி விளக்கு பராமரிப்புத்தொகை மீளளிப்பு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | தெல்கட வாராந்த சந்தையினை முறைப் பிரகாரம் வருமானம் சேகரித்தல் கருமங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாராந்த சந்தை வாடகை அறவிடப்பட்டு சபையின் வருமானம் என காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வாராந்த சந்தையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2017 ஆண்டின் போது கருவா பயிர்செய்கையின் விளைச்சலின் மூலம் ரூபா 456,500 ற்கான வருமானம் ஒன்று உழைக்கப்பட்டிருந்ததுடன், 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது கருவா விளைச்சலின் வருமானத்தை கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை. | கருவா பயிர்ச் செய்கையை பராமரித்து வருமானக் கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் புதிய உடன்படிக்கையின் மூலம் குத்தகைக்கு கொடுத்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (ii) 07 பதவிகளில் காணப்பட்ட மிகைப் பதவியணியை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவிகளை முறைப்படுத்த வேண்டும். | முதலமைச்சின் ஊடாக எதிர்காலத்தில் பதவிகளை முறைப்படுத்துவற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| | (iii) பிரதியீட்டு அடிப்படையின் மீது சேர்க்கப்பட்டிருந்த 16 ஊழியர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 4,668,100 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | பதவிகளை முறைப்படுத்த வேண்டும். | முதலமைச்சின் ஊடாக எதிர்காலத்தில் பதவிகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| | (iv) சபையில் சேவையாற்றும் நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 102 பேரில் 11 பேருக்கு மாத்திரம் கடமை அட்டவணை வழங்கப்பட்டிருந்தன. | அனைத்து ஊழியர்களுக்கும் கடமை சாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் கடமை நிரல்கள் வழங்குவேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | அறவிடப்பட வேண்டிய ரூபா 36,471 ற்கான ஊழியர் கடன் மீதி ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடன் மீதியை விரைவாக அறவிடப்பட வேண்டும். | இறந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியை அறவிடமுடியாக் கடன் என பதவழிப்பதற்கும், ஏனைய கடன்களை அவர்கள் கடமையாற்றும் இடங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தெல்மார் குடியேற்றத்தில் அமைந்திருந்த முன்பள்ளி 2013 ஆண்டின் பின்னர் மூடப்பட்டிருந்ததுடன், முன்பள்ளியை திருத்த வேலை மேற்கொண்டு மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்பள்ளி திருத்த வேலைகள் விரைவாக ஆரம்பிக்க வேண்டும். | 2020 ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) ரூபா 19,174,074 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த தகனசாலை மீளாய்வாண்டு மார்ச் 16 திகதி திறக்கப்பட்ட பின்னர் பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக 2019 மே 09 திகதியின் பின்னர் மூடப்பட்டிருந்தது. இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீண்டும் சேவையை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்று விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும். | அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன், அங்கீகாரம் கிடைத்த பின்னர் விரைவாக தகனசாலை ஆரம்பிப்பேன் என அறிவிக்கின்றேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 17,975,750 தொகை பெறுமதியான ஜேசிபி இயந்திரம், ரூபா 137,500 தொகைக்கான மகேந்திரா கப் வண்டி, ரூபா 3,500,000 தொகைக்கான சாக்கடை பவுசர் என்பன ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. | திருத்த வேலை மேற்கொண்டு ஓட்ட வேலைக்கு பயன்படுத்த வேண்டும். | பெக்கோ இயந்திரம் திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், ஏனைய வாகனங்களை எதிர்காலத்தில் திருத்த வேலைக்காக அனுப்புவேன். |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| டிரக்டர் ஒன்று, கப் வண்டி ஒன்று, டிரேலர் 02 மற்றும் சீமெந்துக் கலவை இயந்திரம் 2001 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருண்மையான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஜூன் மாதம் முதல் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படுவார் என அறிவிக்கின்றேன். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் ஒரு தடவை மாத்திரம் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது சரியாக குழுக் கூட்டங்கள் நடாத்துவேன் என அறிவிக்கின்றேன். |